**பருத்தித்துறை பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பருத்தித்துறை பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பருத்தித்துறை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| குடத்தனை உப அலுவலகத்தில் காணப்பட்டிருந்த ரூபா 476,373 பெறுமதியான 4H கேடர்கள் இருப்பு கட்டுப்பாட்டு கணக்கில் உள்ளடக்கப் படாமையினால் நடைமுறைச் சொத்து மற்றும் திரண்ட நிதி என்பவை நிதிக்கூற்றுக்களில் குறித்த பெறுமதியினால் குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | தனியான பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு பேணப்படுகின்றது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக உரிய காலப்பகுதிகளில் பதிவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன் இருப்புக்களின் சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| | விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 04 மயானங்கள் | 24,772,495 | உரிமை உறுதிப்படுத்தும் சான்று | நில அளவை வரைபடத்தையம் குறிப்புத் தாளையும் கொண்டே அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படடுள்ளது. பராதீனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் இற்றை வரை சபைக்கு பராதீனப்படுத்தபட வில்லை. | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்க்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | மூலதன அபிவிருத்தி வேலைகள் | 40,606,760 | மூலதன அபிவிருத்தி வேலைகள் தொடர்பான விபரங்கள் | சபை நிதியில் ஒதுக்கப்பட்ட ரூபா 27,530,277.90 பெறுமதியான அபிவிருத்தி ஒதுக்கத்திற்கான அபிவிருத்தி வேலைகள் 22/24.02.2022 சபைத்தீர்மானம் மூலம் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள தீர்மானிக்கப் பட்டுள்ளது. | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்க்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | ஆதனவரி நிலுவையின் காலப்பகுப்பாய்வு | 1,110,847 | நிலுவை வருமானங்களின் வருட ரீதியான காலப்பகுப்பாய்வு | ஆதனவரி நிலுவை அறவீடு தொடர்பாக நடமாடும் சேவைகள் மேற்கொள்ளப்பட்டபோது நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 காரணமாக பொதுமக்கள் வருகை தராமையினால் ஆதனவரி அறவீடு குறைவாகவே காணப்பட்டது. | குறித்த சட்ட ஏற்பாடுகளிற்கமைவாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 முகாமைத்துவத் தீர்மானங்களின் இணக்கமின்மைகள்

| | முகாமைத்துவத் தீர்மானங்களின் தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| | - பிரிவு 158 (1) | 01 - 05 வருடங்களாக ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு செயலாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | பதிவேட்டில் உள்ள குடியிருப்பாளர்களிற்கு பற்றாணைச்சீட்டு அனுப்பப்பட்டும் உரிமையாளர் இல்லாத இடங்களில் பற்றாணைச்சீட்டு வழங்கமுடியவில்லை. தற்போது மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டுள்ளது. புதிய பெறுமதி கிடைக்கப்பெற்றதும் பற்றாணைச் சீட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த சட்ட ஏற்பாடுகளிற்கமைவாக தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | | | |
| - 2018.01.24 ஆம் திகதிய இல 05/2018 | கடந்த 03 வருடங்களாக பணியாளர் தொகுதியின் அனைத்து அங்கத்தவர்கள் தொடர்பாகவும் ஓராண்டுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வழங்கப்பட்டமையினை உறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது. | முகாமைத்துவ அபிவிருத்திபயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் போது அப் பயிற்சிநெறிகளில் உத்தியோகத்தர்கள் பங்கு பற்றுகின்றனர் அட்டவனைப்படுத்தப்படாத ஊழியர்களுக்கான பயிற்சிகள் கொவிட் - 19 காரணமாக முன்னெடுக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு அமைய நடவடிக்கைகள் உரிய காலத்தில் மேற்கொள்வதனை உறுதிப்படுத்தல் வேண்டும். | |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 42,348,978 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 28,688,564 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டில் வீதவரியின் பட்டியல்படுத்தப்பட்ட வருமானம் ரூபா 149,087 ஆகக் காணப்பட்ட போதும் ரூபா 64,335 பெறுமதியானது சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | அசாதாரன சூழ்நிலை காரணமாக மக்கள் வரி செலுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை. அத்துடன் நடமாடும் சேவைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இவ் வருடம் வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வருமான சேகரிப்பு முகாமைத்துவத்தினை வினைத்திறனாக்குவதுடன் நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் 01 தொடக்கம் 08 வருடங்களாக ரூபா 294,005 குத்தகை நிலுவை காணப்படுவதோடு குத்தகைக்கு வழங்கப்படும் ஆதனங்களில் 06 கடைகள் மீள புதுப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை கணக்காய்வில் கண்டறியப்பட்டுள்ளது. | ரூபா 118,440 பெறுமதியான குத்தகை நிலுவையானது 2008.2011, 2013 2014 ஆம் ஆண்டுகளுக்குரியவை. சபை அனுமதி பெற்று விட்டுவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் 2021 ஆம் ஆண்டிற்குரிய குத்தகை நிலுவை கொரோனா கால விலக்களிப்பிற்காக கௌரவ ஆளுநரின் அனுமதி தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. விலை மதிப்பிட்டிற்கு பின்னர் ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்பட்டும் புதுப்பிக்கப்படாததிற்கு தொடர் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படடுள்ளது. | குறித்த நிலுவை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைவுபடுத்தப்படுவதுடன் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்குதிக்கமைவாக ஒப்பந்தமானது புதுப்பிக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ஆதனங்களில் புலோலி உப அலுவலகத்திற்கான 7320 ஆதனங்களின் பெறுமதியானது 1972 ஆம் ஆண்டிற்கு பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்படாது காணப்படுவதுடன் செம்பியன்பற்று உப அலுவலக 2419 ஆதனங்கள் மற்றும் குடத்தனை உப அலுவலக 1567 ஆதனங்களின் மதிப்பீடு இதுவரை மேற்கொள்ளப்படாமையினால் சபைக்குரிய ஆதன வரி வருமானம் அறவீட்டில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது | 2019 ஆம் ஆண்டு எமது சபைக்கு சொந்தமான ஆதனங்களுக்கான மீள் மதிப்பீடு விலைமதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் இறுதி மதிப்பீடு இன்று வரை வழங்கப்படவில்லை. கட்டமைந்த பிரதேசங்களாக வர்த்தமானி பத்திரிகையில் 10.11.2017 இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. புலோலி உப அலுவலக விலைமதிப்பீடு சமர்ப்பித்த பின்னர் செம்பியன்பற்று உப அலுவலக, குடத்தனை உப அலுவலக ஆதனங்களிற்கு ஆதனவரி மதிப்பீடு மேற்கொள்ளப்படும். | உரிய காலப்பகுதிகளில் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்படுவதுடன் குறித்த ஆதனங்களிற்கு ஆதனவரியும் அறவிடப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 18,224,179 கனரக வாகனங்களினைப் பயன்படுத்தி கடந்த 05 வருடங்களாக சபைக்குரிய வருமானத்தினை ஈட்டக்கூடியதாக இருந்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | Lorry Gully Bowser (S) and Tractor Gully Bowser 02 வாகனங்களும் மலக்கழிவு அகற்றுவதற்கு பொருத்தமான இடம் இல்லாத காரணத்தினால் குறித்த சேவை மேற்கொள்ள முடியவில்லை. | குறித்த வாகனங்களினை பயன்படுத்தி சபைக்குரிய வருமானத்தினை ஈட்டுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| 2020 ஆம் ஆண்டில் சபையினால் நிறைவேற்றப்பட்ட சாந்த தோட்டம் சந்தை புனரமைப்பு மற்றும் மணற்காடு மாட்டிறைச்சிக் கடை புனரமைப்பு ஆகிய 02 அபிவிருத்தி வேலைகள் ரூபா 333,685 சபைக்கு உரித்தற்ற காணிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அரச காணியாக இருப்பதனை எமது சபைக்குரிய காணியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| **பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள்** | | |
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 06 வாகனங்கள் மற்றும் சபையின் எல்லைக்குட்பட்ட 33 மயானங்கள் என்பன சபையின் பெயருக்கு உரிமை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறித்த 06 வாகனங்களும் பல்வேறுபட்ட காரணங்களினால் பதிவு செய்ய முடியாமலுள்ளது. | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| சபையினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,362,592 பெறுமதியான 04 வேலைகளின் ஒப்பந்த காலம் நிறைவடைந்திருந்த போதும் எமது கணக்காய்வு பௌதீக பரீட்சிப்பின் போது வேலை ஆரம்பிக்கப்படாமலிருந்தது. அத்துடன் மேற்படி ஒப்பந்த வேலைகள் கணக்காய்வுத் திகதி வரையும் ஆரம்பிக்கப்படாதிருந்த போதும் பெறுகை வழிகாட்டி நெறி (2006) 2.11.4 (அ) குறிப்பிடப்பட்ட விடயங்கள் மற்றும் நிர்மாணம் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் வழிகாட்டல் கையேட்டில் (CIDA) பிரிவு 11 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிற்கு அமைவாக சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.6 வாகன முறைமைகளை முகாமைத்துவம் செய்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| **வாகனங்கள் பயன்பாடு** | | |
| சபையினால் பயன்படுத்தப்பட்ட 02 வாகனங்கள் தொடர்பில் 2019 ஆம் ஆண்டிலிருந்து நிதிச்சுற்றறிக்கை 02/2015 இற்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | UNHCR உரிமைமாற்றுவதற்கான ஆவணங்கள் சமர்ப்பித்த பின்னர் உரிமை மாற்றிய பின்னர் அரச சொத்திலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றுநிருப ஏற்பாடுகளிற்கமைவாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |